(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இம் மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதும், 1969-70-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் ஆன பேச்சு குறிப்பு* அச்சடித்து கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை நான் பேசியதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்திய நாட்டிலேயே தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் மின்சாரத் துறை மிக உன்னதமான முறையில் பணியாற்றி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், தொழிற் துறையினருக்கும் அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்கும் வாய்ப்பைப் பெற்றி ருக்கிறார்கள். இந்தப் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ் நாடு மின்சார வாரியத் துறைக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தலைவரும், பணியாற்றி வருகின்ற வாரிய அலுவலாளரும் தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றி வருகின்ற பணிகளுக்காக தான் இந்த மன்றத்தின் மூலம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை அனல் மின்சாரத்தை அதிகமாக நம்ப வேண்டிய சூழ்நிலையும், நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரை குறைவான அளவுக்குத்தான் கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் இருப்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

அனல் மின்சாரத்தை அதிகமாகப் பெருக்கினால்தான் நம் தொழில் தேவைகளுக்கும் வேறு பல தேவைகளுக்கும் தொடர்ந்து மின்சக்தி கிடைக்ககூடிய ஒரு சூழ்நிலை நம்நாட்டின் நிலையாக

*** 149–156-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.**